// தேர்வுகள் // // அவசரம் //

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண் 9200 / ஆ5 / 2019 நாள் 24–01–2020

**பொருள் :** தேர்வுகள் – வேலூர் மாவட்டம் – மார்ச் 2020 மேல்நிலை முதல் / இரண்டாம் ஆண்டு மற்றும் இடைநிலை பொதுத் தேர்வுகள் – முதன்மை விடைத்தாட்கள், கூடுதல் விடைத்தாட்கள் மற்றும் ஏனைய எழுதுபொருட்கள் அனைத்து தேர்வு மையங்களுக்கும் விநியோகித்தல் – தொடர்பாக.

**பார்வை :** சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் 070670 /கே /2019 நாள் : 23 .01.2020

-----

நடைபெறவுள்ள மார்ச் 2020 மேல்நிலை முதலாமாண்டு, இரண்டாமாண்டு மற்றும் இடைநிலை பொதுத்தேர்வுகளுக்கான முதன்மை விடைத்தாட்கள், கூடுதல் விடைத்தாட்கள், வரைபடங்கள், வரைகட்டத்தாட்கள், அகல துணி வேய்ந்த காகித உறைகள் மற்றும் பிற இனங்களை பிப்ரவரி **10 முதல் பிப்ரவரி 19 –** ம் தேதிக்குள் அனைத்து தேர்வு மையங்களுக்கும் விநியோகிக்க வேண்டும் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களுக்கு என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்வு மையங்களுக்கான எழுது பொருட்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் அல்லது உதவி தலைமையாசிரியர் நேரில் வந்து பெற்றுச் செல்லுமாறு தேர்வு மைய பள்ளி தலைமை ஆசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது .

அனைத்து தேர்வு மைய பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதன்மைக் கண்காணிப்பாளர்கள் கீழ்குறிப்பிட்டுள்ள அறிவுரைகளை கண்டிப்பாக பின்பற்றி எவ்வித புகாருக்கும் இடமளிக்காவண்ணம் செயல்பட வேண்டும் எனவும் விடைத்தாள் பக்கங்கள் பள்ளித் தலைமையாசிரியரால் சரிபார்த்து உறுதி செய்து கொள்ள வேண்டும்.

1. மேற்படி தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள், போதுமான எண்ணிக்கையில் முதன்மை விடைத்தாட்கள், கூடுதல் விடைத்தாட்கள் பெறப்பட்டுள்ளனவா என்பதை ஒருமுறைக்கு இருமுறை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும்.

2. தேர்வு மைய பள்ளித் தலைமை ஆசிரியர்கள் விடைத்தாட்களை பெற்ற பின்பு, அதற்கான பதிவேட்டில் பாடவாரியாக பதிந்து பாதுகாப்பாக பராமரிக்க அறிவுறுத்த வேண்டும்.

3. விடைத்தாட்கள் பெறும் பள்ளித் தலைமையாசிரியர், தேர்வு மையத்திற்கு வரும் தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களிடம் விடைத்தாட்களை கணக்கிட்டு பதிவேட்டில் பதிந்த பின்னர், முதன்மைக் கண்காணிப்பாளரின் கையொப்பம் பெற்றுக் கொண்டு ஒப்படைத்தல் வேண்டும்.

4. அனைத்து தேர்வுகளும் முடிந்தவுடன் தேர்வுக்குப் பயன்படுத்தியது போக மீதமுள்ள விடைத்தாட்களை பாடவாரியாக (முதன்மை / கூடுதல் விடைத்தாட்கள்) கணக்கிட்டு தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர் சம்பந்தப்பட்ட தேர்வு மைய பள்ளித் தலைமை ஆசிரியரிடம் ஒப்படைத்து அதற்கான ஒப்புகையைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். மீதம் பெறப்பட்ட அனைத்து வகையான விடைத்தாட்களின் எண்ணிக்கையும் பதிவேட்டில் பள்ளித் தலைமை ஆசிரியர் பதிந்திடல் வேண்டும் எனவும் தெரிவித்தல் வேண்டும்.

5. தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள் மேல்நிலை முதல் / இரண்டாமாண்டு மற்றும் இடைநிலைத் தேர்வுகளுக்கு பாட வாரியாக

முதன்மை / கூடுதல் விடைத்தாட்கள் போதுமான எண்ணிக்கையில் பெற்றுக் கொண்டோமா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

6. போதுமான எண்ணிக்கையில் எழுது பொருட்கள் தங்கள் தேர்வு மையங்களுக்கு பெறப்பட்டதை உறுதி செய்துக் கொள்ள வேண்டும்.

மாநிலத் தணிக்கை ஆய்வுக்குழுவால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு ஏற்கனவே கையிருப்பிலுள்ள மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத்தேர்வுக்கு கூடுதல் பக்கங்கள் கொண்ட முதன்மை விடைத்தாட்களை முதலில் தேர்வு மையங்களுக்கு வழங்கி விட்டு அதன் பின்னர் புதியதாக அச்சடிக்கப்பட்ட குறைவான பக்கங்கள் கொண்ட முதன்மை விடைத்தாட்களை மற்ற தேர்வு மையங்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும். **மேற்படி அதிக பக்கங்கள் கொண்ட விடைத்தாட்கள் மற்றும் குறைந்த பக்கங்கள் கொண்ட விடைத்தாட்கள் இரண்டையும் சேர்த்து ஒரே மையத்திற்கு கலந்து விநியோகம் செய்யக்கூடாது.** எழுது பொருட்களின் பக்கங்கள் கொண்ட விவரம் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**இடைநிலை தேர்வினை பொருத்தவரை புதிதாக அச்சிட்டு வழங்கப்பட்டுள்ள SSLC Tamil என்ற விடைத்தாள்களை தமிழ் மொழிப்பாடத் தேர்வுக்கு வழங்க வேண்டும். இது போலவே SSLC – Social Science என்று புதிதாக அச்சிடப்பட்டு வழங்கப்படும் விடைத்தாளை மட்டுமே சமூக அறிவியல் பாடத்தேர்வுக்கு பயன்படுத்திட விநியோகிக்க வேண்டும். (வரைபடம் மாற்றம் உள்ளதால் )**

| | |
|---|---|
| தமிழ் | SSLC - Tamil |
| ஆங்கிலம் | SSLC – Language |
| கணிதம் / அறிவியல் | SSLC |
| பகுதி IV மொழிப்பாட தேர்வு | SSLC – Language |
| சமூக அறிவியல் | SSLC – Social Science |

ஆகிய விடைத்தாட்கள் வழங்கப்பட வேண்டும்.

இணைப்பு

விவரப்பட்டியல் – 1

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்
தேர்வு மைய பள்ளி தலைமை ஆசிரியர்கள்

நகல்
மாவட்டக் கல்வி அலுவலர்

திருப்பத்தூர் / வேலூர் / அரக்கோணம் / இராணிப்பேட்டை / வாணியம்பாடி

தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்ககாவும் அனுப்பலாகிறது.

# இணைப்பு

**விடைத்தாள் வகை வாரியான பக்கங்கள் (+1 / +2)**

**எண்ணிக்கை விவரப் பட்டியல் :–**

| SCRIPT CATEGORY | NO. OF PAGES | | TYPE |
|---|---|---|---|
| | +1 | +2 | |
| HSE –LANGUAGE | 30 | 30 | RULED / DOTTED |
| HSE-BIO BOTANY | 14 /22 | 14 /22 | UNRULED |
| Addl.Sheet (Unruled) | – | 04 | UNRULED |
| HSE-BIO ZOOLOGY<br>Stitched together | 14 /22 | 14/22 | |
| HSE – ACCOUNTANCY | 30 | 30 /46 | 1-14 UNRULED<br>15-30 Account Sheets } +1<br>1-14 UNRULED<br>15-30 / 15-46 Account Sheets } +2 |
| HSE (OTHERS) | 30 | 30 /38 | UNRULED |